குமரன்

V 6 NO. 43 2 NOV 1933.

3L
M211, N12FKN
N33·6·43.
189167

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு 0-2-6.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
6 மாதம் ரூ. 3 12 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF THE ... MADRAS 23 MAY 1934

Vol 6 ] 1933 ஞு நவம்பர் மீ 2உ [No. 43

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 773
2. அப்பர் (64 கலை-வியாகரணம்-சந்தக்கவித்துறை)
E. N. தணிகாசல முதலியார், B.A.B.L. 775
3. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 1-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 777
4. யாப்பிலக்கணம்—பொருள்கோள்
வித்துவான், M. V. வேணுகோபாலப் பிள்ளை 779
5. தமிழ்ப் பாடம்
அஷ்ட பிரபந்தம்—திருவரங்கத்தந்தாதி 780
6. காற்றுமழை (அங்கம் 5. களம் 1.)
Shakespeare's Tempest 783
7. கலித்தொகை (பாலைக்கலி, 32)
T. A. கனகசபாபதி முதலியார் 784
8. கம்பராமாயணம் (அயோமுகிப் படலம்)
T. N. சேஷாசலம் B.A.B.L. 785
9. வர்த்தமானம் 788

## கலாநிலயம்

189167

### முன்னும் பின்னும்.

மனிதர் மனம் இப்பொழுது எவ்வகையில் இயங்குகின்றதென்பதைக் கடைத்தெருவிற் காணலாம். 'சரக்கினிற்கு' முன்னே நின்று வாங்கப்பயின்றிருப்பவர், அதற்குப் பின்னே நின்று விற்பவர் நிலைமையை உணர்வார்களாயின் உலகமக்களின் நோக்கம் ஒருவாறு உயருமென்பதில் ஐயமில்லை. பூவோ பழமோ, காயோ இலையோ ஏதேனும் பரப்பி, வருமிவர் வாங்குவார்களோ வாங்குவார்களோ என்னுங் கவலையுடன் இரண்டொருநாள் தன்னுடைய சரக்கிற்குப் பின்னே நின்றக்கால், அன்றன்றோ, வாங்குவோர்க்கும் விற்போர்க்கும் இடையே மறைத்திருக்கும் திரைநீங்கி மனதுடன்பட்ட மனிதர்நிலை எவ்வாறு இருக்கும் என்பதை ஊகிக்க இயலும். நாம் அனைவரும் வாங்குகின்றவர் என்றமுறையில் கடைத்தெருசென்றிருக்கின்றோம்; அங்கிருக்கின்றகடைக்காரன் ஒவ்வொருவனும் பேராசையின் உருவமே என்றும், பேதைச் சனங்களை மோசம் செய்வதற்கென்றே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்ற வஞ்சகர் கூட்டத்தைச் சேர்ந்தவனென்றும்மதித்து விவகரிப்பதற்கே பழகியுள்ளோம். கடைக்காரர் எல்லாரும் மாயப்போர்வல்லவர் என்ற எண்ணமின்றிக் காலணாவிற்குக் கத்திரிக்காய் வாங்கி வருமொருவனைக் காணலரிது. ஒரு கடையில் விலை கேட்டுக்கொண்டே அடுத்தகடைத் தட்டில் நம் கண்ணையும், அங்கு விலைகேட்பவர் பேச்சில் செவியையும் நாம் செலுத்துவதுஏன்? இங்குக்காலணா கூடப்போவதுடன் மோசம்போனவன் என்ற மானமும் எங்குப் போய்விடுகின்றதோ என்ற அச்சமுஞ் சேர்ந்து வாங்கவரும் சனங்கள் மனத்தை உழக்குகின்றது. இது யார் குற்றம்? சனங்கள் குற்றமா, மற்று, கடைக்காரர் குற்றமா? ஒரு கூடைக் கத்தரிக்காய்க்குப்பின் இரண்டொரு நாள் நின்று பார்த்தால் இதனைச் சோதித்தபடியாகும். இவ்விடயத்தைப் பற்றிய தன் அனுபவத்தை மேனாட்டறிஞர் எட்வர்ட் கார்பெண்ட்டர் என்பவரே பேசட்டும்—

I had often been in the market as a buyer, and had, I am sorry to say, been accustomed to look upon a tradesman as the personification of artful wickedness—one who combined with his fellows to defraud the public and to take advantage of its innocence. But now I had passed myself into that inner circle, and with what a different eye did I regard the situation! It seemed to me now that it was the public which was at fault. I seemed to see at a glance the original sinfulness of its disposition. How out of its naughty old heart it suspected you always and always of putting the bad stuff at the bottom of the basket; how it would beat you down shamelessly, if it could, to prices below the zero of any possible remuneration to the grower: how it would handle fruit and flowers till all the delicate bloom was gone, and then pass by with a scoff: and, how, instead of desiring to do to others as it would be done by, its one guiding fear, overruling all lesser sentiments of honesty and humanity, was lest it should be *done* by others as it would

desire to *do* them. Hitherto I had looked upon cheap goods as a blessing, but now I saw, or seemed to see, that they meant general ruin. For, cheap goods meant low wages, scarcity of money, meant hungry faces going by, and hands fingering half pence long and anxiously before parting with them : meant slow sales and poor returns to the trader. While scarcity and high prices seemed no longer the unmixed evil I had supposed, for likely as not, they were the indication of a brisk demand, full pockets and general prosperity.

Thus my change of position, from the front to the back of a stall, wrought at once a considerable alteration in my views of some social matters. I took a new view of the world. My axiom was changed, and consequently a lot of theorems, which I thought were well established fell to pieces, and became sadly invalid. I found the inner circle of the market a vantage ground, too, for the study of human nature. Here the buyers are the performers. They occupy the arena, and are exposed to a considerable criticism from behind the stalls. The seller, on the other hand, is comparitively unobserved. The buyer eyes the strawberries, old bird though he be he cannot entirely hide the gleam of his satisfaction at their appearance.

"How much?" he asks carelessly. "Five shillings a peck," is your equally careless reply. You know the fruit is firstrate. You know also that he knows it; and he probably knows that you know that he knows it. "Eh, what are you talking about?" is his answer, and in a assumed disgust he goes off down the market. Presently you see him coming back again : he has been all round : but as he goes by, crafty, he scarcely glances at the coveted stuff. Not till he has got to a safe distance, and to a spot where he thinks he may stand unobserved does he turn again and measure it over with his eye. Now then you are satisfied: you know that you are safe about those strawberries, and you may give your attention to the sale of other things. You know also (what is very important) that there is no better fruit of the same kind and at the same price in the market. Great is your triumph when, after some delay, your customer returns (as he infallibly will *do*) and you are able to tell him that the produce in question is all sold, or that the price has risen.

மற்றவர் நம்மிடத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று விரும்பி எதிர்பார்க்கின்றோமோ அவ்வாறேநாமும் அவர்களிடத்தில்நடந்துகொள்ளவேண்டுமென்னும் ஆங்கிலேயமூதுரையில் ஆழ்ந்தஅன்பு இல்லையாயினும், மனித ஊடாட்டத்தில் முரண்கள் பல விளையாமல்தடுப்பதற்கேனும் அக்கொள்கை உதவலாம். மற்றவர் நம்மிடத்தில் எப்படிநடந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகின்றோமோ அதனினும் மேன்மையாய் நாம் அவரிடம் நடந்துகொள்ளோமாயின்நம்பெருமை என்னும் என்னும் நினைவுதான் மானுடப் பெருமையை ஒருவாறு உணர்த்தவல்லதாம். அவாறின்றி நிறைக்குநிறை எதிர்பார்த்து ஒழுகுவது, "சத்தியத்திற் சிறந்ததோர் சாதனம் இல்லை" என்னும்பழமொழிக்கு இணையாயவோர் தந்திரமே. இது கிடக்க, எட்வர்ட் கார்பென்ட்டர் சொல்வதுபோல், நாம் பிறருக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்பி முயல்கின்றோமோ அதனைப் பிறர் நமக்குச் செய்துவிடாமல் தடுக்கவேண்டுமென்னும் அச்சமே வாழ்க்கையை நடத்துமாயின் மனிதர் கதி என்னவாமென்பதை இயம்பவேண்டுமோ—கண்டுவருகின்றோமே. எவ்வகையிலேனும் குறைக்கக் கூடிய அளவு விலையைக் குறைத்து, "இது அடுக்குமோ, இதனால் கடைக்காரனுக்கு என்ன எஞ்சும்" என்னும் நீதியேனும் இரக்கமேனும் இல்லாமல் வாங்கிக்கொண்டுபோக வருகின்றார்களாதலின், தாம் அத்துரோகத்தைக் கடைக்காரனுக்குச் செய்வதன் முன்னர், அக்கடைக்காரன், கெட்ட சரக்கை அதிகவிலைக்குத் தம் தலையில்கட்டிவிட்டாலோ என்னும் ஓர் பயம் எல்லார் இதயத்திலும் துடிக்கின்றது. கடைக்காரனும் அவ்வாறே, தன் விலையைக்குறைத்துக் கொள்ளையிற் கொள்ள வருவோர் சூழ்ச்சியைத் தடுக்கவேண்டியவனாக இருக்கின்றான். தனித்தனி இவ்விருவரும் மற்றவர் நிலையை உணர்வதில்லை. உணர்வதற்கு வேண்டிய மனோபாவத்தை வளர்ப்பதற்கு ஒருவரும் முயல்வதில்லை. தம்மைக்கொண்டு பிறரையும் பிறரைக்கொண்டு தம்மையும் அளந்து ஆழமறியச் செய்வதற்குரிய சாதனமாவது கலைகளின் பயிற்சி; அதுவே நம்மை நம்மினின்று பிரித்து இயக்கும் பெற்றியது. 'நான் என்ன கொடுக்கக்கூடும்' என்னும் திப்பிய நினைவல்லால், 'நான் என்ன பெறக்கூடும்" என்ற அசுரசிந்தனை, கலையுணர்விற்கு அயலானது. அஃதில்லா நிலையைக் கார்பெண்ட்டர் பின் வருமாறு ஏசுகின்றார்—

**Trade is against nature, it is in the long run against human nature, as long as "What I can get?" is its motto. The true nature of man is to give like the sun; his getting must be subordinate to that. When giving his thoughts are on others and he is "free," when getting, his thoughts are on himself—he is anxious, therefore, and miseable. As long as trade takes "What can I get?" for its axiom, anxiety and misery will characterise all its work—as they do to-day.**

கைவைத்தவைகளை யெல்லாம் சாபமுறக் கெடுப்பது வர்த்தகம் என்று ப்ரென்ச் அறிஞர் தோரு (Thoreau) என்பவர் கூறுவது பொய்யன்று. அந்நாட்டு அறிஞர் மாண்ட்டஸ்க்யூ என்பார் மற்றொருவரும் வியாபாரம் வளர்கின்ற நாடுகளில் களவு பொய் வஞ்சனைகள் அனைய பாதகங்களும் அயலயல் பெருகிவரும் என்று சாற்றுகின்றார். விற்கும் சரக்கோடு வாய்மையையும் சேர்த்து விற்காமல் வர்த்தகத்தில் இலாபம் பெருகக்கூடுமென்று சாதிக்கத் துணிந்தவனைத் தான் இதுகாறுங் கண்டதில்லை என்று எட்வர்ட் கார்ப்பெண்ட்டருங் கூறியிருக்கின்றனர். மானுடப்போக்கை இன்று பார்த்துவருகின்ற நம் கைப்புண்ணிற்குக் கண்ணாடி வேண்டா. இக்காலம் எத்தனை எத்தனையோ உலகநன்மைக்கும் மனிதமுன்னேற்றத்திற்கும் முயல்கின்றவர்கள், இத்தகைய வர்த்தகமின்றி வாழ்க்கையேனும், வஞ்சனையின்றி வர்த்தகமேனும் நடந்தாலன்றி நற்கதி நண்ணற் கியலாதென்பதைச் சிந்தித்து அதற்கு ஆவன செய்ய முன்வாராமை சால வருந்துதற் குரியது. கலையின் இயற்கை கொடை; ரூபாய் அணா பைகளின் விலையின்றி வாங்கவல்லதும் அதுவே. எனின், கலைப் பயிற்சியே மனிதரை இந்நிலையில் காக்கவல்லதென்னும் கருத்துடையது கலாநிலயம்.

# அப்பர்

## அப்பரும் அறுபத்திநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[760-வது பக்கத் தொடர்ச்சி]

சுவாகதம்:—

இதன்விதி—(சூத்திரமே உதாரணம்)

நீடெழுத் திறுதி நீங்கிய மாவி
னோடு மூன்றுகுறி லீற்றுறு காய்ச்சீர்
கூடு மற்றையவை கூவிளை தேமா
சூடு மால்பெயர் சுவாகத மென்றே

இரதோத்தம்—இதன் சூத்திரம்:—

ஒன்று மூன்றுபதி னொன்றோ டொன்பதே
மென்ற தானமவை நீடெ ழுத்தவாய்க்
குன்றெ ழுத்தொழி யிடத்துக் கூடுமே
லொன்று நாமமிர தோத்த மோதினர்.

மதனார்த்தை:—

குற்றெழுத் தீற்றுத் தேமாங்கனிச் சீர் மூன்றும், இரண்டு நெடிலா லாக்கப்பட்ட தேமாச்சீர் ஒன்றுஞ் சேர்ந்து வருவது:—(உ - ம்)

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதாரமென் னீரே

என்னும் சுந்தரர் பதிகமும், அவர் முதல் பதிகமாகிய "பித்தாபிறை சூடி" யென்பதும் இவ்வகையைச் சேர்ந்தனவே. ஆயினும் இசையில் ஆழ்ந்த இவர் தேமாங்கனிக்குத் தேமாந்தண்பூவும் கூவிளங்காயும் உபயோகித்தாலும், இருநெடிலா லாக்கப்படவேண்டிய தேமாவுக்குப் புளிமா பயன்படுத்துவதும் நாம் குற்றமென்ன லாகாது.

அதிகரிணி:—

மூன்று புளிமாங்கனியும் ஒரு புளிமாவுமாய் வருவது. இது முன்கண்ட மதனார்த்தையிலிருந்துசிறிதே மாறுபாடுடையதாம். (உ - ம்)

மலைச்சாரலும் பொழிற்சாரலும்
புறமேவரு மினங்கண்
மலைப்பாற்கொணர்ந் திடித்தூட்டிட
மலங்கித்தன களிற்றை
அழைத்தோடியும் பிளிறீயவை
யலமந்துவந் தெய்த்துத்
திகைத்தோடித்தன் பிடிதேடிடும்
சீபர்ப்பத மலையே.

[குறிப்பு:—இதில் இரண்டுசீர்கள் வேறுபாடு காணப்படினும் இவ்வகையிலே கொள்க.]

மணிமாலை—(இதன் விதி)

மூன்றோ டொருநான்கே மும்மூன் றொடுபத்தே
தோன்றா விசருங்கத் தோன்றுங் கவிநாமம்
வான்றோய் மொழிவல்லார் வைத்தார் மணிமாலை
மீன்றோய் விழிவேலால் வெல்லப்பொரு தையால்.
—விருத்தப் பாவியல்.

சிரக்விணீ.

இது ஐந்து மாத்திரைக் கூவிளச்சீரினா லாவது—

புத்தரும் தோகையம் பீலிகொள் பொய்ம்மொழிப்
பித்தரும் பேசுவ பேச்சல பீடைக்
கொத்தலர் தண்பொழில் கோழம்ப மேவிய
அத்தனை யேத்துமின் னல்லல றுக்கவே
—சம்பந்தர்.

இதில்சிறிதுமாறுபடுவதைவிருத்தப்பாவியல்வேறு வகையாக்கி அதற்குப் பின்வருமாறு விதியும் உதாரணமுமாய சூத்திரம் கூறுகின்றது.

ஒன்று மூன்றினுட னேழுபதி னொன்றுபதினைந்
தென்றவாவி நெடிலாய்ப் பிறவெழுத் திலகுவாய்த்
துன்று மாறறிக தூமொழி யிலங்குவதனப்
பொன்று மாருயிரெனப் பொலியுவே னயனமே.

மற்றும் ஒருவகைச் சந்தவிருத்தம் உண்டு. அது வன்றொண்டர் பதிகத்திலும் சம்பந்தர் பதிகத்திலும் காணலாம். அதன் வாய்பாடு, கூவிளம் கூவிளங்காய் கூவிளம் கூவிளங்காய் ஆக வருவது (உ - ம்)

நல்லநி னைப்பொழிய நாள்களி லாருயிரைக்
கொல்லநி னைப்பனவுங் குற்றமு மற்றொழியச்
செல்வவ யற்கழனித் தென்றிரு வாரூர்புக்
கெல்லைமி தித்தடியே னென்றுகொ லெய்துவதே.
சுந்தரர் - திருவாரூர் - பண் - புறநீர்மை.

இது இரட்டிய எண்சீர்ச் சந்தவிருத்தம் காண்க:-

தொண்ட ரடித்தொழலுஞ் சோதியி ளம்பிறையுஞ்
சூதன மென்முலையாள் பாகமு மாகிவரும்
புண்டரி கப்பரிசாம் மேனியும் வானவர்கள்
பூசலி டக்கடல்நஞ் சுண்டக ருத்தமரும்
கொண்டலெ னத்திகழுங் கண்டமு மெண்டோளும்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமுங் கண்குளிரக்
கண்டுதொ ழப்பெறுவ தென்றுகொ லோவடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே.
திருக்கானப்பேர்-பண்-புறநீர்மை.

இவை தமிழிலுள்ள சந்தக் கலிவிருத்தங்களாம். இனிச் சந்தக் கலித்துறைகளை ஆராய்வோம்.

### III. சந்த விருத்தங்கள் வகை

(ii) சந்தக் கலித்துறை

கலிநிலைத் துறைக்கள் தமிழில் சந்தமற்றன சிலவே; அவற்றை முன்னரே வகுத்துக் காட்டினோம். சந்தம் உள்ள கலிநிலைத்துறை தமிழில் பன்னிரண்டு வகையாகும். அவை பின்வருமாறு:—

(1) சேணி.

இது மூன்று மாத்திரைச்சீர் ஐந்தால் ஆக்கப்பட்டு அடியின் இறுதியில் ஒரு நெடில் பெறுவது:-

மூவெ ழுத்து மைந்தெ ழுத்து முற்றுவ
மேவு மென்ப சேணி நாம மேலையோர்.

இது வடமொழியில் அதிகமாய்ப் பயன்படுத்தப்படுமென்பர் விருத்தப் பாவியல் ஆசிரியர். திருஞானசம்பந்தர் திருமீயச்சூர் - பண் - காந்தாரம் திருப்பதிகத்திலும் இதனை ஒருவாறு காணலாம்.

காயச் செவ்வி காமற் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூரன் றறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை வீட்டுமே,

(2) நளினீ.

நான்கு மாத்திரை யளவுள்ள மாச்சீர்கள் வெண்டளை பெற்று வருவது.

அவனே மறுவற் றபரம் பிரமம் புராண
னவனே முழுதும் தருகா ரணமாங் கெவர்க்கு
மவனே யிறைவன் றொழுவார்க் கருள்வீ டளிப்போ
னவனேயெனவோதி வெவ்வேறு முரைப்பர்வங்கண்
—காஞ்சிப்புராணம் - வயிரவீசப்படலம் 8

(3) நளினீ போன்ற நான் மாத்திரைச் சீர் பெறினும், இவ்வகை வெண்டளையை விதியாய்க் கொள்ளாது, நான் மாத்திரைச் சீர்கள் ஐந்தாம் அந்தத்தில் நெடில் பெறுவது—இதைச் சம்பந்தர் பதிகத்தில் காணலாம்.

தண்முத்தரும்பத் தடமூன் றுடையான் றனையுன்னிக்
கண்முத் தரும்பக் கமழ்ச்சே வடிகை தொழுவார்கள்
உண்முத் தரும்ப வுவகை தருவா னூர்போலும்
வெண்முத் தருவிப் புனல்வந் தலைக்கும் வெண்காடே

(4) மத்த மயூரம்.

முதலிரண்டு சீர்களும் தேமாவாகவும், மூன்றாஞ் சீர் கூவிளமாகவும், நான்காஞ்சீர் தேமாவாகவும் ஐந்தாஞ்சீர் புளிமாங்காய்ச் சீராகவும் வருவது. (உ-ம்)

பேசப் பட்டே னின்னடி யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல ராலுன் னடியானென்
றேசப் பட்டே னினியடு கின்ற தமையாதால்
ஆசைப் பட்டேன் ஞட்பட் டேனுன் னடியேனே.
திருவாசகம் - ஆநந்த பரவசம் 2.

[குறிப்பு:—இது சிறிது சீர் வேறுபடினும் இவ்வகுப்பைச் சார்ந்ததேயாம்]

மத்த மயூரம்.

முன்னே தேமா *பின்னது தேமா மொழிமூன்றில்
துன்னுஞ் சீரே கூவிள நான்கிற் றுறுதேமா
பொன்னே யைந்திற் புல்லிய சீரே புளிமாங்காய்
சொன்ஞர் பேரே மத்தம யூரத் தொடர்பென்றே
—விருத்தப் பாவியல்.

இதற்குத் தக்கஉதாரணம் கந்தபுராணத்தில் மார்க்கண்டேயப் படலத்தில் காணலாம்.

அந்தக் காலத் தெம்முயிர் காப்பா னரனுண்டால்
வந்தக் கூற்றனென்செய்வ னென்ஞ வடதொன்னூ
சந்தப் பாவிற் போற்றுதல் செய்தே தனிநின்றே [ல்
மைந்தன் என்ன மார்க்கண் டேயரைச் சிறப்பிக்கும்

சந்தக்கலித்துறை இவ்வகையதேயாகும்.கம்பனும் இராமாயணத்தில் இதைக் கையாள்வது காண்க:-

செய்தா யேனும் தீவினை போடும் பழியல்லால்
எய்தா தெய்தா தெய்தினி ராமன் னுலகின்றான்
வைதா லன்ன வாளிகள் கொண்டுன் வழியூடே
கொய்தா னன்றே கொற்றமுடித்துன் குழுவெல்லாம்

என்பது இவ்வகையில் மிகவும் பரிசுத்தமான விலக்கண மமைந்தது.

(5) அஸ்வகதி

குற்றெழுத் தீற்றுக் கூவிளச்சீ ரைந்தோடு நெட்டெழுத்து மாத்திரை அடியின் அந்தத்தில் பெறுவது:-

*மெய்சேர் வண்டேன் மும்மத நால்வாய் முரண்வேழக்
கைபோல் வாழை காய்குலை யீனுங் கலிக்காழி
மைசேர் கண்டத் தெண்டோள் முக்கண் மறையோனே
ஐயா வெண்பர்க் கல்லலுறா வுடையாவே.-சம்பந்தர்.

மாடுளி ரைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்
சூடுப ரப்பிய பண்ணைவ ரம்புசு ரும்பேற
வீடுபெ ருக்கிய போர்களின் மேகமி ளைத்தேற
நீடுவ ளத்தது மேன்மழை நாடெனு நீர்நாடு
—பெரிய புராணம்

சம்பந்தர் திருச்சிக்கல் - பண் - இந்தளம் உள்ள பதிகமும் இவ்வகையே.

(6) "நீளாத உயிரீற்று மாங்காய்" ஐந்துடன் நெட்டெழுத்து அடியின் இறுதியிற் பெறுவது தமிழுக்குச் சொந்தமானது. இது சம்பந்தர் பதிகத்திலே முதலில் உற்பத்தியானதாம்:—

ஏனவெயி றாடரவொ டென்புவரி
யாமையிவை பூண்டிளைஞராய்க்
கானவரி நீடுழுவை யதனுடைய
படர்சடையர் காணியெனலாம்
ஆனபுகழ் வேதியர்க ளாகுதியின்
மீதுபுகை போகியழகார்
வானமுறு சோலையிசை மாசுபட
மூசுமயி லாடுதுறையே.

--சம்பந்தர்-திருமயிலாடுதுறை-பண்-திருவிராகம்சாதாரி.

(7) கலவைச் சந்தக் கலித்துறை அல்லது கலவை சந்தத்துறை—இச்சந்தக் கலித்துறையில் நான்குமாத்திரை அளவினுலாகும் எண்வகைச் சீர்களும் வரும்.

பாரல் வெண்குரு கும்பகு வாயன நாரையும்
வாரல் வெண்டிரை வாயிரை தேரும் வலஞ்சுழி
மூரல் வெண்முறு வல்நகு மெய்யொளி யீர்சொலீர்
ஊரல் வெண்டலை கொண்டுல கொக்கவு ழன்றதே
சம்பந்தர்-திருவலஞ்சுழி, பண்-இந்தளம், விஞவுரை 2.

(8) முதல் சீரும் மூன்றாஞ் சீரும் மூன்று மாத்திரை அளவு பெற்றனவாயும் இரண்டு நான்கு ஆகும் இடத்தன நான் மாத்திரைச் சீர்களாயும் ஐந்தாம்சீர் நான்மாத்திரைக் கூவிளச்சீராயும் வருவது:—

வேக மதநல் லியானை வெருவவு ரிபோர்த்து
பாக முமையோ டாகப் படிதம் பலபாட
நாக மரைமே லசைத்து நடமா டியகம்பன்
மேக முரிஞ்சும் பொழில்சூழ் மீயச் சூரானே.

என்னும் சம்பந்தர் செய்யுளும் இவ்வகையேயாம்.

இதற்கு விருத்தப்பாவியல் விதி,

முதலு மூன்றது மாவி னத்தொரு மூன்றெழுத்
துறவு சீரதி ரண்டு நான்கொரு நான்கெழுத்
ததவு கூவிள மைந்தி லோங்கிய கூவிளம்
மதிநு தற்கலை யல்குன் மாந்தளிர் மேனியே.

9. மூன்றாகுற்றெழுத்தை இறுதியிலுடைய ஐந்து மாத்திரையளவாகிய ஐந்து காய்ச்சீர்களும் அந்தத்தில் ஒரு நெட்டெழுத்தும் வருவது:—

காய்ந்துவரு காலனையன் றுதைத்தவனூர்
கழுமலமாத் தோணிபுரஞ்சீர்
ஏய்ந்தவெங் குருப்புகலி யிந்திரனூ
ருருங்கமலத் தயனூரின்பம்
வாய்ந்தபுற வந்திகழும் சிரபுரம்பூந்
தராய்கொச்சை காழிசண்பை
சேர்ந்தனைமுன் பயந்துலகில் தேவர்கடம்
பகைகெடுத்தோன் றிகழுமூரே.
சம்பந்தர் - திருப்பிரமபுரம், பண்-கார்தாரம்

திருக்கோமுத்திரி—6

10. நீண்ட உயிரீற்றுக் கூவிளம் கருவிளம் சீர்களாலாக்கப்பட்டது. தமிழில் பலதுறைகளையுடையதாம். சம்பந்தர் தேவாரத்தில் சிறப்பாய்க் காணலாம்:—

ஏனவெண் கொம்பொடு மெழில்திகழ்
மத்தமும் மிளவரவும்
கூனல்வெண் பிறைதவழ் சடையினர்
கொல்புலித் தோலுடையர்
ஆனினல் லைந்துகந் தாடுவர்
பாடுவர் அருமறைகள்
தேனில்வண் டமர்பொழில் திருநெல்வே
லியுறை செல்வர்தாமே.

சம்பந்தர் - திருநெல்வேலி - பண் - சாதாரி 5

11 ஐந்து மாத்திரைக்*காய்ச்சீராலும், விளச்சீராலும் ஐந்தாமிடத்து ஏழுமாத்திரைக் காய்ச்சீர் கனிச்சீராலு மமையும் கலித்துறை மற்றொரு வகையாம். (உ - ம்) விளச்சீர் வருவதற்கு,

திருந்துமா களிற்றின மருப்பொடு
திரண்மணிச் சந்தமுந்திக்
குருந்துமா குரவமும் குடசமும்
பீலியும் சுமந்துகொண்டு
நிரந்துமா வயல்புகு நீடுகோட்
டாறுசூழ் கொச்சைமேவிப்
பொருந்தினார் திருந்தடி போற்றிவாழ்
நெஞ்சமே புகலதாமே.

சம்பந்தர் - திருக்கொச்சைவயல் - பண்—சாதாரி 1

12. பன்னிரண்டாவது வகை திருவாலங்காடு (பண் - தக்கராகம்) சம்பந்தர் பதிகம் "துஞ்சவருவாரும்" என்று ஆரம்பிப்பது. இதன் இலக்கணம்

நேரொன்று காயு நிரையொன்று நேரு முதலீ
றீரொன்றொ டொன்றி னிரையென்று காயதியலே
நேரொன்று நேரி னிகழ்வா மிருந்த விடமே
வாரொன்று கொங்கை மதிபோன் றிலங்கு நுதலே.

—விருத்தப் பாவியல்.

துணங்குமறை பாடி யாடி
வேடம் பயின்றாரும்
இணங்குமலை மகளோ டிருகூ
றொன்றா யிசைந்தாரும்
வணங்குஞ்சிறுத் தொண்டர் வைக
லேத்தும் வாழ்த்துங்கோ
டணங்கும்பழை யனூ ராலங்
காட்டெம் மடிகளே —சம்பந்தர்.

ஆக, சந்தக் கலித்துறை வகைகள் தமிழில் பன்னிரண்டாகும். அவற்றுள் நான்கே, வடமொழியிலிருந்து கொள்ளப்பட்டன. ஏனைய தமிழில் உற்பத்தியாயின. இவற்றிற்குப் பெரும்பாலும் காரணகர்த்தர் திருஞான சம்பந்தரே யாம். ஆனால், அவர் பாடிய காலத்தில் விருத்தவுற்பத்தி இளம்பருவத்தில் இருந்ததால் அவர் பதிகங்கள் ஒருவகைத்தாயிராமல் மாறுபட்டும் காணப்படும். சுந்தரர் காலத்தில் சற்று நிலைபெற்றும், சேக்கிழார் காலத்தில் உருவமாறுபாடின்றி நிலைபெற்றும் நின்றன. இவற்றுள் இனியவையாய்த் தனக்குப் பயன்பட்டவற்றைக் கம்பர் இராமாயணத்தில் ஆங்காங்கு எடுத்துக்கொண்டதை யாவரும் அறிவார். மற்றுமுள்ள சந்தவிருத்தங்களின் உற்பத்திகளுமவ்வாறே யாம். இனி, அவற்றைக் காண்போம்.

*காய்ச்சீர் வருவதற்கு உதாரணம்

வாளவரி கோளபுலி கீள துரி
தாளின்மிசை நாளுமகிழ்வ
ராளுமவர் வேளநகர் போளயில
கோளகளி றாளிவரவில்
தோளமரர் தாளமதர் கூளியெழ
மீளிமிளிர் தூளிவளர்பொன்
காளமுகில் மூளுமிருள் கீளவிரி
தாளகயி லாயமலையே."

—திருக்கயிலாயம் திருவிராகம் - பண் - சாதாரி 1

## நம்மாழ்வார் வைபவம்

### திருவாய்மொழி

6-ம் பத்து, 1-ம் தசகம்

[766-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பாசுரம்.

போற்றி யானிரந் தேன்புன்னை
மேலுறை பூங்குயில்காள்
சேற்றில் வாளை துள்ளும்
திருவண் வண்டூருறையும்
ஆற்ற லாழி யங்கை
யமரர்பெரு மானைக்கண்டு
மாற்றங் கொண்டரு ளீர்மையல்
தீர்வதொரு வண்ணமே.

உரை:—ஆற்றல் - ஏற்ற வோர் வலிய கருமத்தை அல்ப முயற்சியால் கொடியில் செய்தல்.(அதாவது பகவான் உலக சிருஷ்டி பக்தர்கள் இரக்ஷணம் அனையவைகளைத் தன் ஸங்கல்பத்தால் எளிதில் செய்து முடித்து ஒரு காரியமும் செய்யாதவன்போல் காணும் சக்தி யுள்ளவன்)ஆழியங்கை- சக்கரப்படையை ஆச்ரித விரோதிகளை ஸம்ஹரிப்பதற்காகத் தம் கையில் தரித்தல்.அமரர் பெருமான்-நித்திய ஸூரிகளுக்குப் பெருமான்(அதாவது தன் வைபவத்தில் ஆச்ரிதரைக் கூட்டிக்கொண்டு இன்பம் நுகர்தல்)இப்படிச் சக்தியும் குணமும் உள்ள திருவண்வண்டூர்ப் பெருமானைக் கண்டு,புன்னைமேல்உறையும் பூங்குயில்களே,என்னுடைய காதல்தீர அவனிடமிருந்து நல்ல பதில்வார்த்தையை அன்புகூர்ந்து கொண்டுவரும்படி நான் உங்களைத் துதி செய்து வேண்டிக்கொள்கிறேன், என்கிறாள்.

கருத்து:—உங்கள் ரமணியமான நறும் பூக்களடர்ந்த புன்னைமரவாசஸ்தானத்தைவிட்டுப் போய்வரச் சொல்வது கடினமாயினும்,திருவண்வண்டூர் நன்செய்யிலும் வண்டுகள் நிறைந்த தடாகங்களிலும் நன்னீரில் வாளைமீன்கள் துள்ளிவிளையாடும்; அவற்றைக் கண்டு நீங்கள் தாமதியாமல் பகவானுக்கு என் செய்தி சொல்லி நல்ல உத்திரம் கொண்டுவரவேண்டுமென்று தாழ்ந்து இரக்கிறாள்.

7-ம் பாசுரம்.

ஒருவண்ணம் சென்றுபுக் கெனக்கொன்
றுரையொண் கிளியே
செருவொண் பூம்பொழில் சூழ்செக்கர்
வேலைத் திருவண்வண்டூர்

கருவண்ணம் செய்யவாய் செய்யகண்
செய்யகை செய்யகால்
செருவொண் சக்கரஞ் சங்கடை
யாளந் திருந்தக்கண்டே.

பதக்குறிப்புக்கள்:—செரு ஒண் பூ - "நீ முன்னு" "நான் முன்னு" வென்று அகங்காரங்கொண்டு அடர்ந்து அழகாய் வளரும் பூக்கள். வேலை - சமுத்திரம்; இங்குஉபசாரமாகத் தடாகங்களைக் குறிக்கிறபடி.

பொழிப்புரை:—திருவண் வண்டூரில் உள்ள சோலைகளின் தாமரைத் தடாகங்களின் மனதை இழுக்கும் அழகுகளில் அகப்படாதே ஒருவண்ணம் சென்றுபுக்கு என்னோடுள்ள கலவியாலே புதுக்கணித்த திருநிறத்தையும் திருப்பவளத்தையும் திருக்கண்களையும் திருக்கைகளையும் திருவடிகளையும் திருவாழியையும் திருச்சங்கையும் தனக்குத்திவ்விய அடையாளமாகக் கொண்டவனைத் திருந்தக் கண்டு எனக்கொன்றுரை ஒண் கிளியே என்கிறாள்—ஆறாயிரப்படி.

---

8-ம் பாசுரம்.

திருந்தக் கண்டெனக் கொன்றுரை
யாயொண் சிறுபூவாய்
செருந்தி ஞாழல்மகிழ் புன்னை
சூழ்தண் திருவண்டூர்
பெருந்தண் டாமரைக் கண்பெரு
நீண்முடி நாற்றடந்தோட்
கருந்திண் மாமுகில் போற்றிரு
மேனி யடிகளையே.

அவதாரிகை:— இப்பாசுரத்தில் நாகணவாய்ப் புள்ளைத் தூது விட்டாலும் மேற்பாசுரத்தில் கிளிக்குச் சொன்ன அடையாளங்களைத் தொடர்ந்து பகவானுடைய வேறு சிற்சில சின்னங்களைச் சொல்லி அவனது அழகு இருக்கும்படியை விவரிக்கிறாள்.

பதக் குறிப்புக்கள்:—செருந்தி-ஓர் வகை மரம், ஞாழல் - ஓர்விதக் கொடி.

கருத்து:—இப்பிராட்டியை ஆறாத காதலால் திரும்பியும் திரும்பியும் பகவானின் திவ்விய ஸௌந்தரியமானது தாண்ட அதையே வர்ணிப்பதில் அவள் மனதைச் செலுத்தித் தூது விடுகின்றாள். திருப்பாதங்கள் தொடங்கிக் கிரீடம் வரையில் வர்ணித்தாய் விட்டது.

---

9-ம் பாசுரம்.

அடிகள் கைதொழு தலர்மே
லசையு மன்னங்காள்
விடிவைச் சங்குரைக்கும் திருவண்
வண்டூ ருறையும்
கடிய மாயன்றன்னைக் கண்ணனை
நெடுமாலைக் கண்டு
கொடிய வல்வினையேன் றிறம்
கூறுமின் வேறுகொண்டே

பதக்குறிப்புக்கள்:— வேறுகொண்டு-தனித்திருக்கிற வேளையில். பொழுது விடிய சங்கு ஊதுவதால் விடியற்காலத்தைச் சங்கு உரைப்பதாகச் சொல்லுகிறார். சென்றால் எங்களுக்குக் காலமாயிருக்குமோ வென்ன, நீங்கள் அவ்விடம் செல்லுமளவிலே திருப்பள்ளி உணர்த்துங் காலமாகும்; துயில் உணர்ந்தருளினவாறே பக்தர்களிடத்திலுள்ள தீர்க்க சிநேகத்தால் அவர்களுடைய சகல துக்கங்களையும் போக்கியருளும் சபாவனாயிருக்கிற நெடுமாலைக் கண்டு கொடிய வினையாட்டியாகிய என் திறம் சொல்லவேணும்.

---

10-ம் பாசுரம்.

வேறுகொண் டும்மையா னிரந்தேன்
வெறிவண் டினங்காள்
தேறுநீர்ப் பம்பை வடபாலைத்
திருவண் வண்டூர்
மாறில் போரரக்கன் மதிள்நீ
றெழச்செற் றுகந்த
ஏறு சேவகனார்க் கென்னையு
முளளென் மின்களே.

உரை:—வெறி வண்டினங்காள்-பூக்களில் மதுபானம் பண்ணித் திரியும் வண்டுக்கூட்டங்களே, உம்மை-உங்களை, வேறு-தூதர்களில் தனியான வேறு வகுப்பினர்களாக, கொண்டு-உடல்சிறியவர்களா யிருப்பதாலும் சோபையான இறக்கைகளையுடையவர்களாயிருப்பதாலும், வேகத்திலும் குரலிலும் மேம்பாடுள்ளவர்களானதாலும் விசேஷமாக மதித்து, இரந்தேன் - யாசிக்கிறேன், தேறு நீர் - தெளிந்த நீரையுடைய, பம்பை வடபாலை திருவண் வண்டூரில், பம்பைக்கு வடபுறமிருக்கும் திருவண் வண்டூரில், மாறுஇல் - ஒப்பில்லாத, போரரக்கன்-யுத்தத்தில் நிபுணனான இராவணனை, மதிள் நீறு எழ - அவனுடைய பட்டணமாகிய இலங்கை பொடியாக, செற்று உகந்த - தொலைத்து ஆண்மையைக் காட்டிய, ஏறு சேவகனார் - ஏறு போன்ற வீரனானவர்க்கு, யானும் உளள் - சீதாபிராட்டியை வீரத்தன்மையால் காப்பாற்றியதுபோல் அவ்வீரனை ஆச்ரயித்தவள் யானும் ஒருத்தி காப்பாற்றுதலை எதிர்பார்க்கின்றவள் இருக்கின்றேன்.

குறிப்பு:—இதுவரையில் தன் திறத்தைப் பகவானுக்கு விண்ணப்பம் செய்யச்சொன்ன பிராட்டி கோபாவேசத்தால் தானும் ஒருத்தி அவனது இரக்ஷணத்துக்குரியவளென்று தெரியப்படுத்துங்கோள் என்கிறாள்.

---

11-ம் பாசுரம்.

மின்கொள் சேர்புரி நூற்குற
ளாயகல் ஞாலங்கொண்ட
வன்கள்வ னடிமேற் குருகூர்ச்
சடகோபன் சொன்ன
பண்கொ ளாயிரத்து ளிவைபத்துந்
திருவண் வண்டூர்க்கு
இன்கொள் பாடவல்லார் மதனர்
மின்னிடை யவர்க்கே.

பதக்குறிப்புக்கள்:—மின்கொள்-தேஜஸு பொருந்திய, சேர்-தான்கொண்ட வேஷத்துக்குச் சேர்த்தியாய்ப் பொருந்திய, புரிநூல்-வாமனாவதாரத்தில் பிரம்மசாரியாய் மார்பில் தரித்த பூநூல், கள்வன் - வஞ்சகன், இவை பத்துந் திருவண் வண்டூர்க்கு-இப்பத்து திருவண்வண்டூர்ப்பெருமாளைப் பற்றியேஇயற்றியது இவனுக்கல்லவோ தூது விட்டது, இப்படி இருக்க "ஞாலங்கொண்ட கள்வன் அடிமேல் சொன்ன" என்று எப்படிப்பாடக்கூடுமென்றால் - எவ்வண்ணம் பலிச்சக்கரவர்த்தியை வாமனமூர்த்தி தன் ரூபலாவண்ணியத்தால் வஞ்சித்தானோ அவ்வண்ணமே என் சித்தத்தை அபகரித்தது மாத்திரமன்றி, வேறு கதியில்லாத என்போன்றபேதையை விட்டுச் சென்றான்.



சேர்ந்த எழுத்திருக்குமாயின், இவை புணரும்போது வகரமெய் தோன்றும். இதுவும் உடம்படுமெய் யன்று:—

அ + யானை = அவ்யானை. இ + யுகம் = இவ்யுகம். உ + யூகம் = உவ்யூகம். எ + யோசனை = எவ்யோசனை.

குறிப்பு:—இந்த நான்கு இடைச்சொற்களுக்குப் பின், உயிரேனும் யகரவரிசையைச் சேர்ந்த உயிர்மெய் யெழுத்தேனும் வருமாயின், வகரமெய் தோன்றும். மற்ற உயிர்மெய்யெழுத்துக்கள் வருமாயின், அந்த உயிர்மெய்யிலுள்ள மெய்யே தோன்றும். அ + காடு = அக்காடு. இ + நாய் = இந்நாய். உ + வனம் = உவ்வனம். எ + மரம் = எம்மரம்.

எனினும், முன் சொன்னபடி யகரம்வந்தால் மாத்திரம், ய் தோன்றாமல் வ் தான் தோன்றும். அ + பெட்டி + அப்பெட்டி. இ + செடி = இச்செடி. உ + மலை = உம்மலை, எ + தாமரை = எத்தாமரை, என்று அந்தந்த வருமொழி முதல் மெய்யே தோன்றுவது போல், யகரம்வந்தால், யகரமெய்யே தோன்றாமல் வகரமெய்தான் தோன்றும்.

அ + யமகம் = அவ்யமகம் (என்று ஆகுமேயல்லாது அய்யமகம் என ஆகாது)
இ + யானை = இவ்யானை (இய்யானை அன்று)
உ + யோகம் = உவ்யோகம் (உய்யோக மன்று)
எ + யௌவனம் = எவ்யௌவனம் (எய்யௌவனம் அன்று)

iv. மெய்யை ஈற்றிலுடைய சொற்களுக்குப் பின்னும், உயிர்வர, அவ்வுயிர் (மகன் + அழகு = மகனழகு; பல் + உடைந்தது = பல்லுடைந்தது.) என்பனபோல் முன்னின்ற மெய்யின்மேல் ஏறி உயிர்மெய் ஆகாமல், இடையில் வகரமெய் தோன்றிப் புணர்ந்திருக்கவும் சிற்சில இடங்களில் காண்கிறோம்:—

செல் + உழி = செல் வ் உழி = செல்வுழி
சார் + உழி = சார் வ் உழி = சார்வுழி
விண் + அத்து = விண் வ் அத்து = விண்வத்து.

இப்படி வருகிற வகரமெய்யும் உடம்படுமெய் அன்று. வகரமெய் தோன்றியது, என்றுதான் சொல்ல வேண்டும்

குறிப்பு:—இலக்கியங்களில் ஒவ்வோரிடத்தில் இப்படி வகரமெய் தோன்றக் காண்கின்றோம் என்று கூறினோமேயல்லாது, நிலைமொழியிறுதியில் மெய்யெழுத்தும் வருமொழிமுதலில் உயிரும் வருமிடமெல்லாம் வகரமெய் தோன்றப் புணர்த்திவிடலாம் என்று எண்ணிவிடப்படாது. கல் + உளி = கல்லுளி, என்றேயாகும், கல்வுளி என ஆகாது.

---

# காற்று மழை

## Shakespeare—"The Tempest"

அங்கம் 5. களம் 1.

[770-வது பக்கத் தொடர்ச்சி]

[மீகாமனும் இதையாளனும் திகைத்தனராய்ப் பின்தொடர ஏரியல் திரும்பி வருகின்றது.]

**கன்ஸாலோ:**—ஓ, பார் ஐய, பார் ஐய! நம்மிற் பின்னும் சிலர் இங்கு உளர் (1) தரையிலே தூக்குமரமிருக்குமாயின் இக்கீழ்மகன் முழுகமாட்டானென்று நான் முன் சோதிடம் கூறினேன் (2). கப்பலினின்று அருளை ஆணையிட்டகற்றிய ஏ அபசாரமே, கரையிலே கழறுதற்கோர் ஆணையில்லையா (3)? தரையிலே உனக்கு வாயொன்றும் இல்லையோ? என்ன செய்தி?

**இதையாளன்:**—செய்தியிற் சிறந்தது, எங்கள் அரசனையும் மற்றவர்களையும் இனிது காணப்பெற்றோம் என்பது. அடுத்தது, எங்கள் கப்பல்—மூன்றுமணி நேரத்திற்குமுன் உடைந்தொழிந்ததென்று நாங்கள் கைவிட்ட அது—கட்டுக் கலையாமல் உறுதிக் கயிறுகளுடன் ஆயத்தமாகி, நாம் கடலில் புறப்பட்டபோது இருந்ததேபோல் இருக்கின்றது.

**ஏரியல்:**—[ப்ராஸ்ப்பீரோவிற்கு ஒருபுறமாய்] ஐயனே, நான் சென்றதிலிருந்து இக்காரியங்கள் எல்லாம் செய்துமுடித்தேன்.

**ப்ராஸ்ப்பீரோ:**—தந்திரம் மிகுந்த எனது ஆவி நீ (4)!

**அலான்ஸோ:**—இயற்கை நிகழ்ச்சிகள் அல்ல இவை. அதிசயத்தின்மேல் அதிசயமாய் உறுதி பெறுகின்றன. இங்கு நீ எப்படி வந்தாய், சொல்.

**இதையாளன்:**—நன்று, நான் விழித்திருந்தேன் என்று எண்ணினேனாயின் சொல்ல முயல்வேன். நாங்களெல்லோரும்—எப்படி என்றறியோம்—கப்பற்படிகளினடியில் கிடந்து நித்திரையிற் செத்திருந்

மீகாமன் = கப்பல் அதிகாரி; இதையாளன் = பாய்களை விரிப்பது இறக்குவது திருப்பவது போன்ற காரியங்களை மீகாமனுக்குஉட்பட்டுச் செய்பவன். (அங்கம் 1. களம் 1. பக்கம் 15.)

(1) நம்முடன் கப்பலில் இருந்தவர்களிற் பின்னுஞ் சிலர் இதோ வருகின்றனர்காண்-என்று வியப்புடன் கூறுகின்றான்.

(2) அங்கம்.1. களம் 1. 16-பக்கத்தில் கன்ஸாலோ இதையாளனை வைதசொற்களை நோக்குக. "இந்தக் கயவன் தூக்குமரத்தில் தொங்கிச் சாவதற்கே பிறந்தவன். ஆகையால் இவன் கடலில் முழுகிச் சாகமாட்டான். அவன் இக்கப்பலில் இருக்கும் வரையில் இக்கப்பல் முழுகாது என்னும் நிச்சயத்தால் அவனுடன் இருக்கின்ற நாமும் தப்பலாம்" என்று அங்குக் கன்ஸாலோ சொன்னவைகளை நினைவிற்கொண்டு இங்கு இவ்வாறு கூறுகின்றான்.

(3) அபசாரம் = தெய்வத்திற்கும் பெரியோர்க்கும் மாறாக நிந்தனைகள் செய்தல். ஆணை வைத்துவைத்துப் பேசுதல் பெரிய அபசாரம் என்று கருதப்படும். கீழ்மக்களே அது செய்வார். இவ் விதையாளன் அத்தகையவன். அபசாரத்தின் உருவமே போல்பவன் என்று கன்ஸாலோ அவனை ஏசுகின்றான். "கப்பலிலே நீ இட்ட ஆணைகளுக்குத் தண்டனையாகக் கடவுள் அக்கப்பலின்பால் தன் அருளைக் காட்டாமல் போனார். கப்பலிலிருந்து கடவுளின் அருளை நீக்கியது உன் ஆணைகளே. மற்று, கரையிலே உனக்கு ஒரு ஆணைகூட வைக்கத் தெரியவில்லையா?—என்பது பொருள்.

(4) சற்றுமுன்னர் ப்ராஸ்ப்பீரோவை விட்டு அகன்றிருந்த ஏரியல் அந்த நேரத்தில், கப்பலையெல்லாம்தான் மீண்டும் நேர்செய்தமைத்ததென்றுசொல்ல, ப்ராஸ்ப்பீரோ அதன் தந்திரத்தைப் பாராட்டுகின்றான்.

தோம் (5). அங்கிருந்து, இப்பொழுதுதான், கதறல் கூவல் குழறல் சங்கிலிக்குலுங்கல், இன்னும் பலவித ஒலிகள், எல்லாம் பயங்கரமானவை— இவ்வகை அதிசய அனேக அரவங்களால் எழுப்பப்பட்டோம். உடனே, விடுதலை. அங்கு, எங்கள் நல்ல அழகிய இராசாத்திக் கப்பலைப் புதிது கண்டோம். எங்கள் மீகாமன் அவளைக் காணக் கூத்தாடினான். (6). ஒரு நொடியில், தயை செய்க, கனவிற்போல் அவர்களை விட்டுப் பிரித்து ஏக்கமுடன் இங்குக் கொணரப்பட்டோம் (7).

ஏரியல்:—[ப்ராஸ்ப்பீரோவிற்கு, ஒருபுறமாய்] செவ்விதின் செய்யப்பட்டதோ இது?

ப்ராஸ்ப்பீரோ:—தீரமாக, என் ஊக்கமே (8). விடுதலை அடைவாய் நீ.

அலான்ஸோ:—மனிதர் மிதித்துள்ள சுழல்வழிகளில் இதனினும் விந்தைமிக்கது வேறில்லை (9). இயற்கை நடத்துவதனினும் அதிகம் இக்காரியத்தில் உளது (10). யாதேனும் அசரீரியொன்றுதான் நம் அறிவைத் திருத்தவேண்டும் (11).

ப்ராஸ்ப்பீரோ:—ஐயனே, என் பெரும, இக்கருமத்தின் விந்தையின் மீதுமோதிமோதி உன் மனத்தினை வருத்திக்கொள்ளாதே (12). குறித்த அவகாசத்தில்—விரைவில் வாய்க்கும் அது—விளைந்த இந்நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றையும், இயல்வனவென்று உனக்குத் தோன்றும் வண்ணம், தனியே விளக்குவேன் (13). அதுவரை, மகிழ்வுடன், இவைகளில் ஒவ்வொன்றையும் நன்கு மதித்திரு (14)—[ஏரியலுக்கு ஒரு புறமாய்] இங்குவா, ஆவியே; காலிபனையும் அவன் தோழர்களையும் விட்டுவிடு; மந்திரத்தை அவிழ்த்துவிடு [ஏரியல் போகின்றது]—என் பெருந்தகை ஐயனே, எவ்வண்ணம் இருக்கின்றனை (15); நின் பரிவாரத்திலிருந்து, நீ மறந்த பயல்கள், இன்னும் சிலர் காணுமலிருக்கின்றனர் (16).

(5) நித்திரையிற் செத்திருந்தோம்=செத்தவர்க்கு நிகராக உடல்தெரியாமல் உறங்கிக் கிடந்தோம்—என்பது பொருள்.

(6) அவளை=கப்பலை. உடைந்ததென்று எண்ணிய கப்பலைக் காணலும் மீகாமன் களிப்பினால் குதித்துக் கூத்தாடக் கண்டோம்—என்பது பொருள். இராசாத்திக் கப்பல் என்று அருமையாய்க் கூறப்பட்டது. புதிது கண்டோம்=புதிதாகக் கட்டப்பட்ட கப்பல்போல் தோன்றக் கண்டோம். இதையாளன் இங்குக் குறிக்கின்ற ஒலிகள், ஏரியலாலும் மற்ற ஆவிகளாலும் செய்யப்பட்டவை.

(7) தயைசெய்க, என்பது 'தயைசெய்து நான் சொல்வதைக் கேள்' என்னும் குறிப்புடையது. அவர்களை=கப்பலாட்கள் முதலியவர்களை. ஏக்கமுடன்=கப்பலை விட்டு வருவதற்கு மனமில்லாதபடியால், 'ஏக்கமுடன் கொணரப்பட்டோம்' என்கிறான்.

(8) தீரமாகச் செய்தாய்—என்று முடித்துக்கொள்க. ஊக்கமே, என்பது, ஊக்கம் மிகுந்த ஏரியலே, என்றபொருளுடையது.

(9) சுழல்வழி=சுற்றிச்சுற்றி வருவதன்றி வெளியேற மாட்டாமல் பாதைகள் பின்னிக் கிடக்கின்ற இடம்—எல்லாம் இங்கு மிக்க ஆச்சரியமாயிருக்கின்றது—என்பது பொருள்.

(10) இந்நிகழ்ச்சிகள் எல்லாம் இயற்கையாக நிகழக் கூடியவைகள் அல்ல—என்பது பொருள்.

(11) இவைகளெல்லாம் எப்படி நிகழ்ந்தன என்பதை ஏதேனும் அசரீரிவாக்கு விளக்கிச்சொன்னாலன்றி நம் அறிவுதெளிவதற்கு வேறு வழியில்லை—என்பதுபொருள்.

(12) இவ்விந்தைகளை அறியவேண்டுமென்று முயன்று நீ வீணாகச் சஞ்சலப்படாதே—என்பது பொருள்.

(13) மிகவிரைவில், இதனை உனக்கு உரைப்பதற்குத் தக்க சமயம் வாய்க்கும்படி செய்துகொண்டு, நிகழ்ந்தவைகள் ஒவ்வொன்றையும் உனக்குத் தனியே விளக்கிக்கூறுவேன். அப்பொழுதுநீ இவைகளை அசம்பாவிதங்களென்று கருதமாட்டாய்—என்பது பொருள்.

(14) இவைகளில் யாதும் தீதில்லை என்று எண்ணியிரு—என்பது பொருள்.

(15) இது அரசனைப் பார்த்துக் கூறியது.

(16) பயல்கள்—ஸ்ட்டிபானோவும், ட்ரின்குலோவும்.

# கலித்தொகை

[768-வது பக்கத் தொடர்ச்சி]

## பாலைக்கலி 32.

இளவேனிற்கால வரவின்கண் ஆற்ருது வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றி இருக்குமாறு வற்புறுத்தினுள். அவ்வுரையை உளம் கொள்ளாது வருந்திக் கொண்டிருந்தாட்குத் தலைவனது வரவை யுணர்ந்து தோழி பேருவகையால் கூறி ஆற்றுவித்ததைக் கூறுவது இச்செய்யுள்.

வீறுசான் ஞாலத்து வியலணி காணிய
யாறுகண் விழித்தபோற் கயநந்திக் கவின்பெற
மணிபுரை வயங்கலுட் டுப்பெறிந் தவைபோலப்
பிணிவிடு முருக்கித ழணிகயத் துதிர்ந்துகத்
துணிகய நிழனோக்கித் துதைபுடன் வண்டார்ப்ப
மணிபோல வரும்பூழ்த்து மரமெல்லா மலர்வேயக்
காதலர்ப் புணர்ந்தவர் கவவுக்கை நெகிழாது
தாதவிழ் வேனிலோ வந்தன்று வாரார்நம்
போதெழி லுண்கண் புலம்ப நீத்தவர்
எரியுரு வுறழ விலவ மலரப்
பொரியுரு வுறழப் புன்குபூ வுதிரப்
புதுமலர்க் கோங்கம் பொன்னெனத் தாதூழ்ப்பத்
தமியார்ப் புறத்தெறிந் தெள்ளி முனியவந்
தார்ப்பது போலும் பொழுதென் னணிநலம்
போர்ப்பது போலும் பசப்பு [எனி
நோந்து, நகுவனபோ னந்தின கொம்பு நைந்துள்
யுகுவது போலு மென்னெஞ் செள்ளித்
தொகுபுட னாடுவ போலுமயில் கையி
லுகுவன போலும் வளையென் கண்போ
லிகுபறல் வாரும் பருவத்தும் வாரார்
மிகுவது போலுமிந் நோய்
நரம்பின் றீங்குர னிறுக்குங் குழல்போ
லிரங்கிசை மிஞிறொடு தும்பிதா தூதத்
தூதவர் விடுதரார் துறப்பார்கொ னோதக
விருங்குயி லாலு மரோ
எனவாங்கு
புரிந்துநீ யெள்ளுங் குயிலையு மவரையும் புலவாதி
நீலித ழுண்கணாய் நெறிகூந்தல் பிணிவிட



நாள்வரை நிறுத்துத்தாஞ் சொல்லிய பொய்யன்றி
மாலைதாழ் வியன்மார்பர் துனைதந்தார்
காலுறழ் கடுந்திண்டேர் கடவினர் விரைந்தே.

(வரி 1 - 9.) வீறுசால் - பெருமைமிக்க, ஞாலத்து - உலகத்தினது, வியல் அணி காணிய - பரந்த அழகைக் காணும் பொருட்டு, ஆறு கண் விழித்த போல் - ஆறுகள் கண்களை விழித்துப் பார்த்தன போல, கயம் நந்தி கவின் பெற - (அவ்வாறுகளின் பக்கங்களிலுள்ள) குளங்கள் (நீர்) நிறைந்து அழகு பெறவும், மணி புரை வயங்கலுள் - பளிங்குமணியைப் போன்ற கண்ணுடிக்குள்ளே, துப்பு எறிந்தவை போல - பவழங்கள் வீசப்பட்டுத் தோன்றுவனபோல, பிணி விடு - கட்டு அவிழ்கின்ற, முருக்கு இதழ் - முருக்கம்பூவினுடைய இதழ்கள், அணிகயத்து உதிர்ந்து உக-அழகிய குளங்களிலே உதிர்ந்து சிந்தவும், துணி கயம் - தெளிந்த குளங்களிலே, நிழல் நோக்கி - தம் உருவத் தோற்றத்தைக் கண்டு, துதைபு-(அவ்விடத்தை) நெருங்கி, வண்டு உடன் ஆர்ப்ப - வண்டுகள் ஒரு சேர ஆரவாரம் செய்யவும், மரம் எல்லாம்-கரையிலுள்ள மரங்களெல்லாம், அரும்பு ஊழ்த்து - அரும்புகள் மலர்ந்து, மணிபோல மலர் வேய - பல மணிகளைச் சூடினாற்போலப் பூக்களைச் சூடவும், காதலர் புணர்ந்தவர் - காதலையுடைய கணவரைக் கூடினவருடைய, கவவு கை - ஆலிங்கனம் செய்த கையானது, நெகிழாது - நழுவாதபடி, தாது அவிழ் வேனிலோ வந்தன்று - மகரந்தப் பொடிகளை அவிழ்க்கும் இளவேனிற் காலமோ வந்தது, நம் போது எழில் உன் கண் - நமது பூவினது அழகையுடைய மையுண்ட கண்கள், புலம்ப நீத்தவர் - வருந்த நம்மை விட்டு நீங்கின தலைவர், வாரார் - வாரார் ஆயினுர்!

(வரி 10 - 15) எரி உரு உறழ-நெருப்பின் நிறத்தைப் போல, இலவம் மலர - இலவ மரங்கள் மலரவும், பொரி உரு உறழ-பொரியின் உருவைப்போல, புன்கு பூ உதிர - புன்க மரங்கள் பூக்களை உதிர்க்கவும், புதுமலர் கோங்கம் - புதிய மலரையுடைய கோங்க மரங்கள், பொன் என - பொன்போல, தாது ஊழ்ப்ப - மகரந்தப் பொடிகளை உதிர்க்கவும், தமியார் - தனித்திருப்பாரை, புறத்து எறிந்து - வெளியே தள்ளி, எள்ளி முனிய - இகழ்ந்து யாரும் வெறுக்க, பொழுது - இவ் விளவேனிற் காலம், வந்து ஆர்ப்பதுபோலும்-வந்து ஆரவாரம் செய்வதுபோல இருக்கின்றது, பசப்பு - (அதனால்) பசப்பானது, என் அணி நலம் போர்ப்பது-எனது அழகையுடைய நலத்தை மறைப்பதொன்று யிருக்கின்றது!

போர்ப்பது போலும் என்ற விடத்துப் 'போலும்' என்பது உரையசை, ஒப்பில் போலியாதலின்; பின்னர் வருகின்ற பலவற்றிற்கும் இஃதொக்கும்.

(வரி 16 - 21) நொந்து - (கணவரைப் பிரிந்த பெண்களை நாம் இகழ்தற்குக் காலம் வரவில்லையே என்று) வருந்தி இருந்து (அது வந்த பின்னர்), நகுவனபோல் நந்தின கொம்பு - (நம் வருத்தங் கண்டு) சிரிப்பன போலக் கொம்புகள் (பூவொடு) வளர்ந்தன; என் நெஞ்சம் - (அதனைக் கண்டு) என் மனம், நைந்து - வருந்தி, உள்ளி - (தலைவரை) நினைந்து, உகுவது - அழுகின்றது; மயில் எள்ளி தொகுபுடன் ஆடுவ - மயில்கள் இகழ்ந்து சேரத் திரண்டு ஆடுகின்றன; வளை கையில் உகுவன - வளையல்கள் நம் கையிலிருந்து கழல்கின்றன, என் கண் போல் அறல் இகுபு வாரும் பருவத்தும்- என் கண்ணீர் போல நீர் இற்று இற்று ஒழுகும் இளவேனிற் காலத்தும், வாரார் - தலைவர் வாரார் ஆயினுர், மிகுவது இ நோய் - (ஆதலால்) இந்த நோய் மிகுவதொன்ருய் இருக்கின்றது!

கண் - ஆகு பெயர்.

(வரி 22 - 25.) நரம்பின் தீங்குரல் - யாழ் நரம்பினது இனிய இசையை, நிறுக்கும் குழல் போல் - (தண்டிலே) நிறுத்தும் புல்லாங்குழலைப் போல, இரங்கு இசை - ஒலிக்கும் ஓசையையுடைய, மிஞிறொடு தும்பி - வண்டுகளும் தும்பிகளும், தாது ஊத- மகரந்தப் பொடிகளை உண்ண, நோதக-நாம் வருந்தும்படி, இருங்குயில் ஆலும் - கரிய குயில்கள் கூவும், அவர் தூது விடுதரார் - தலைவர் தூது விடாதவராய், துறப்பார் கொல் - நம்மை விட்டுவிடுவாரோ?

(தனிச்சொல்)

என-என்று (தலைவி சொல்லக் கேட்ட தோழி) ஆங்கு- அசை.

(சுரிதகம்)

(வரி 27 - 31) நீல் இதழ் உண் கண்ணுய் - நீலப் பூப்போன்ற மையுண்ட கண்களையுடையவளே, நீ புரிந்து- நீ மனம் வேறுபட்டு, எள்ளும் குயிலையும் - (உன்னை) இகழும் குயிலையும், அவரையும் - தலைவரையும், புலவாதி- வெறுக்காதே, நெறி கூந்தல் பிணி விட-நெறிப்புடைய உனது கூந்தல் கொண்ட சிக்கு நீங்க, நாள்வரை நிறுத்து - (தாம் வரும்) நாள் எல்லையை வரையறுத்து, தாம் சொல்லிய - அவர் சொன்ன மொழிகள், பொய் அன்றி- பொய்யாகாதவாறு, மாலை தாழ் வியன் மார்பர் - மாலை தாழ்ந்த அகன்ற மார்பையுடைய தலைவர், கால் உறழ் கடுந் திண் தேர் - காற்றைப்போன்ற விரைவினையுடைய பலம் பொருந்திய தேரை, கடவினர் விரைந்து துனைதந்தார் - செலுத்தினவராய் மிக விரைந்து வந்தார்.

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்— 9. அயோமுகிப் படலம்.

[772-வது பக்கத் தொடர்ச்சி]

ஈதா கும்மோ கோதா விரியே.

அனங்கன் அன்று இராமனை மேனின்று நோக்கித் தடுமாறியதன் பொருள் யாவதேயாயினும், கழியாத கங்குலுங் கழியலுற்றது. அந்தக் காலை,

வெள்ளஞ் சிலம்பு பாற்கடலின்
விரும்புந் துயிலை வெறுத்தளியுங்
கள்ளுஞ் சிலம்பும் பூங்கோதை
கற்பின் கடலிற் படிவாற்கு
புள்ளுஞ் சிலம்பும் பொழில்சிலம்பும்
புனலுஞ் சிலம்பும் புனைகோல
முள்ளுஞ் சிலம்புஞ் சிலம்பாவே
லுயிருண் டாகும் வகையுண்டே

[வெள்ளம் ஒலிக்கின்ற திருப்பாற்கடலில் தான் விரும்பிச்செய்யும் நித்திரையை விட்டு, வண்டுகள் தேனும் ஒலிக்கின்றபூமாலையை யணிந்துள்ள சீதையின் கற்புநிலையாகிய கடலில்தோய்ந்துள்ள இராமன்பொருட்டு, பறவைகளும் ஒலிக்கும், சோலைகளும் ஒலிக்கும், நீர்நிலைகளும் ஒலிக்கும், அலங்கரித்த சீதையின் உருவம் நடமாடுகின்ற ஒலி அவன் உள்ளத்திலும் ஒலிக்கும். இவைகள் ஒலிக்காவிட்டால் இராமனது உயிர் தரித்து நிற்கும்வகை உண்டோ]

என்றோர் செய்யுள் கம்பர் நூலிற் காணப்படுகின்றது. இது, கம்பராலேயே சான்றோர்கவிக்கு உபமேயமாயமைக்கப்பட்ட கோதவிரி நதியைப்போன் றின்மையால் விரைந்து மேற்செல்லலே மதியாம். பின்வருநிலையணியைப் புணர்த்திப் புலவர்க்கு ஒளடதம் ஒன்று ஆக்கவேண்டும் என்னுங் கருத்தல்லால் இதனைப் பாடுங்கால், பாடியது கம்பரேயாயின், அவருக்கு வேறோர் கருத்து இருந்ததென் றெண்ணவோ சற்றேனு மிட

மில்லை. இன்னுஞ் சில இவ்வண்ணம் இவர் சிலம்பாமல், கதிரோன், தன் சடாயுவிற்குச் செய்யச் சென்ற கடன்களை யெல்லாம் முடித்தோ முடிக்காமலோ கடிது மீண்டனன். இவன் சித்தமுங் கலங்கி யிருந்தது போலும்; ஏனெனில்,

முடிநாட் டியகோட் டுதயத்து
முற்ற வுற்றான் முதுகங்குல்
விடிநாட் கண்டுங் கிளிமிழற்று
மென்சொற் கேளா வீரற்காண்
டடிநாட் செந்தா மரைபொதுங்கு
மன்ன மிலளால் யானடைத்த
கடிநாட் கமலத் தெனவவிழ்த்துக்
காட்டு வான்போற் கதிர்வெய்யோன்

[நீண்ட இரவு விடிந்து பகல் ஆனது கண்டும், கிளிபோற் பேசுகின்ற சீதையின் மெல்லிய சொற்களைக் கேளாத இராமனுக்கு, கிரணங்களையுடைய சூரியன் அப்பொழுது, முற்காலத்தில் செந்தாமரையில் வசிக்கும் அன்னம் போன்ற சீதை, 'நான் முன்னிரவு மூடிய வாசனையுடைய புதிய தாமரையில் இல்லை பார்' என்று மலர்த்திக் காட்டுவான் போல, முடி வைத்ததுபோன்ற சிகரத்தையுடைய உதயகிரியில் முழுதும் எறித் தோன்றினன்.]

சீதையில்லாத இடத்தைக்காட்ட ஓர் சூரியனுக்கு இத்துணை முயற்சி வேண்டா. தன்மேற் பழியில்லை என்பதை அவிழ்த்துக் காட்டுவதுடன் வெய்யோன் தன் கருமம் முடிந்ததென்று கருதியது அவன் குலத்திற்கோ அழகன்று. நைடதத்தினின்று பண்டிதர்கள் யைக்கொண்ட ஔடதமுறைப்படி விடியலோடு ஒரு தற்குறிப்பேற்றமும் மடியவேண்டுமாதலின், வெய்யவன் கதி இவ்வகையதாயிற்று. இனி வருவது நினைப்பணி,

பொழிலை நோக்கும் பொழிலுறையும்
புள்ளை நோக்கும் பூங்கொம்பின்
எழிலை நோக்கு மிளமயிலி
னியல்பை நோக்கு மியல்பாளுள்
குழலை நோக்கிக் கொங்கையிணைக்
குவட்டை நோக்கி யக்குவட்டின்
தொழிலை நோக்கித் தன்னுடைய
தோளை நோக்கி நாள்கழிப்பான்

[இராமன், சோலையைப் பார்ப்பான், சோலையில் வசிக்கும் பறவைகளைப் பார்ப்பான், பூத்த கிளைகளின் அழகைப் பார்ப்பான், இளமை பொருந்திய மயிலின் தன்மையைப் பார்ப்பான், இதனின்று, அம்மயிலின் இயல்புடைய சீதையின் கூந்தலைக்கருதி, அவள் கொங்கைச் சிகரங்கள் இரண்டையும் கருதி, அச்சிகரங்கள் செய்யும் தொழிலைக் கருதி, அத்தொழிலிற்கு இலக்கான தன் தோள்களையும் பார்த்து, நாள்கழிப்பவன் ஆயினன்.]

எதுகையா லன்றிப் பொழில் குழலை நினைக்கச்செய்தது வேறு எதனால் என்பது விளங்கவில்லை. புள்ளென்பது சக்ரவாகப் புள்ளாயின் அது கொங்கையிணைக் குவட்டை நினைப்பூட்டி யிருக்கலாம். எனினும் அக்குவட்டின் தொழிலை இந்நிலையில் நினையாதிருப்பதே கோடிபெறும். இன்னணம் தகாதன நினைக்கின்றான் தன் முன்னோன் என்பதை உன்னி அதனைத் தடுப்பதற்கோ,

அன்ன காலை யிளவீரன்
அடியின் வணங்கி நெடியோயப்
பொன்னை நாடா தீண்டிருத்தல்
பொருளோ வென்னப் புகழோனுஞ்
சொன்ன வரக்க னிருக்குமிடந்
துருவி யறிதுந் தொடர்ந்தென்ன
மின்னுஞ் சிலையார் மலைதொடர்ந்த
வெயில்வெங் கானம் போயினரால்

[இப்பொழுது இளையவீரனாகிய இலக்குவன், இராமனுடைய பாதங்களில் வணங்கி, "பெரியோய், அந்தச் சீதையைத் தேடாமல் இங்கே இப்படி இருத்தல் தகுதியோ" என்று சொல்ல, புகழுடைய இராமனும், "சடாயு சொன்ன அரக்கன் இருக்கின்ற இடத்தைத் தேடித்தொடர்ந்து அறிவோம்" என்றுரைக்க, அதன்மேல், மின்னுகின்ற வில்லைத்தாங்கிய அவ்விருவரும், மலைகள் தொடர்ச்சியாகப் பொருந்தியதும் வெயிலினால் வெப்பம் மிகுந்ததும் ஆகிய காட்டில் சென்றனர்]

முன், வெள்ளத்தினின்று சில சிலம்பப் புறப்பட்ட கம்பர்பாசுரத்தைத் தடுக்க வந்த சூரியன் தாமரையை அவிழ்த்துக் காட்டப் புக்கதேபோல், இராமனது நினைப்பைக் கலைக்கப்புகுந்த இலக்குவனும் வெள்ளையினும் வெள்ளையாய இப்பாட்டைப் பாடலுற்றான். மாச்சீரும் காய்ச்சீருமன்றி இச்செய்யுளில்வேறொரு சீருமில்லை. கம்பரே பாடி இடைச்செருகிய வெள்ளிப்பாட்டாதல் வேண்டும் இது. வேறொன்றும் அமையாத இத்தகைய வோர் வெறும் பாட்டில் அணியேனும் யாதேனும் உளதோ என்று தேடுதல் தக்கதே. மற்று உவமைகூட ஒன்று இதனில் தென்படவில்லையே; கலவையணி என்று கழித்துவிடற்கு ஏதுவாய கலக்கமும் இதனிற் காணேம். எனினும், உரைநடையில் நிற்குமொன்று செய்புளென்று பேரெடுத்திருப்பதால், இதனை உரைநடையணி, என்று வேண்டுமாயின் ஓர் அணியைப் புதிதுபடைத்துப் புகலலாம். இந்த அணிக்கு உரிய மரியாதையையும் அளிக்கவேண்டுமாயின், "இதனை வடநூலார் வசனாலங்காரம் என்று அழைப்பர்" என்னுங் குறிப்பையுஞ் சேர்த்துக்கொள்க.

இருந்த இடத்தையும் இத்தகைய செய்யுள்களையும் பின்விட்டு மேற்சென்ற இளவீரர், பதினெட்டு யோசனை தூரங்கடந்து ஓர் பொழில்புக, ஆரியர் சிந்தையின் அலக்கணை அறிந்த ஆதித்தன் தானும் நாரியை உலகெங்கணும் நாடி உழன்று மேருமலை தனக்குப் பின்னாகும்படி போகவே,

அரண்டரு குஞ்செறி யஞ்சன புஞ்ச
முரண்டன போலிரு ளெங்கணு முந்தத்
தெருண்டறி வில்லவர் சிந்தையின் முந்தி
இருண்டன மாதிர மெட்டு மிரண்டும்

[அரண்போன்ற நெருங்கிய மையின் தொகுதி மாறுபட்டு எதிர்த்தது போல் இருளானது எங்கும் முற்பட, எட்டுத்திக்குக்களும்; தெருண்ட அறிவில்லாதவர் மனம் போல விரைந்து இருண்டன]

கம்பர்பாசுர மாயிற்றே என்ற பரிவினால், பின்னிரண்டடிகளிலமைந்த எதிர்நிலையணியின் நயத்தைப் பாராட்ட வேண்டியிருக்கின்றது. இதனோடு, 'தருகும்' என்பதிலுள்ள வேண்டாவழிச் சாரியைமீதுஞ் சிறிது கண்ணோட்டஞ் செலுத்தலாம்.

அறிவிலாதவர் மனம்போல் இருண்ட அச்சோலையின்கண் உள்ள ஓர் பளிக்கறையில் வீரர் இருவரும் எய்தினர். அவ்வயின் இராமனுக்கு நீர் வேட்கை மிக, இளையோனை நீர் கொணருமாறு போக்கினன். அதன் மேல்,

எங்கணு நாடின னீரிடை காணான்
சிங்க மெனத்தமி யன்றிரி வானை
அங்க வனத்து ளயோமுகி யான
வெங்க ணரக்கி விரும்பினள் கண்டாள்

[எங்குந் தேடி நீர் காணமல் சிங்கம்போல் தனியாகத் திரிந்த இலக்குமணனை அக்காட்டில் அயோமுகி யென்னும் கொடிய அரக்கி பார்த்து ஆசைகொண்டாள்]

இவ்வயோமுகியின் வரவும் போக்கும் வான்மீகத்தில், பின் வருமாறு, மிக விரைவில் நிகழ்ந்து முடிகின்றன—

"மதங்காச்சிரமத்தில், ஆழ்ந்து எப்போதும் இருள் செறிந்திருந்த குகை யொன்றை அவ்விரு இராஜ குமாரர்களும் கண்டார்கள். அதற்குச் சமீபத்தில் அவர்கள் செல்லும்போது அங்கே தீரமில்லாத ஏழைச்சனங்களுக்கு மிக்க பயத்தை யுண்டாக்குவதும் பார்ப்பதற்கு அருவருப்பானதும் பயங்கரமானதுமான பெரிய வடிவத்தை உடையவளும், கூரியபற்களும் சரிந்த வயிறும் கடினசரீரமுமுடையவளும், கோர மிருகங்களைப் புசிப்பவளும், பயங்கரமான விரிந்த கூந்தலையுடையவளுமான ஒரு கொடிய அரக்கி நின்றாள். அவ்விருவர்களையுங் கண்டவுடன் அவள் வேகமாக ஓடி வந்து, "வா, நாம் இருவரும் விளையாடலாம்" என்று இராமருக்கு முன்னர்ச் சென்றுகொண்டிருந்த லக்ஷ்மணரைக் கைப்பற்றினாள். அவள் இலக்ஷ்மணரைக் கட்டிக்கொண்டு, "என் பெயர் அயோமுகி, நாத, நான் உம்மேல் காதல் கொண்டது உமக்குப் பெரிதும் நல்லது. வீர, மலை முழைஞ்சுகளிலும், ஆற்றோரங்களிலும், என்னோடு எப்போதும் விளையாடிக்கொண்டிரும்" என்றாள். அவ்வண்ணம் அவள் சொல்ல, பகைவரேறாகிய லக்ஷ்மணர் கோபமடைந்து வாளை ஓங்கி அவளுடைய மூக்கையும் காதையும் முலையையும் வெட்டித் தள்ளினார். இவ்வாறு மூக்குங் காதும அறுபட்ட பயங்கரமான தோற்றத்தையுடைய அவ்வரக்கி கதறிக்கொண்டு வந்தவழியே ஓடினாள். அவள் ஓடினபின் இராம லக்ஷ்மணர்கள் விரைந்து சென்று ஒரு காட்டை அடைந்தார்கள்.]

கம்பர்நாலிலும் அயோமுகி ஆசையோடு வந்து மூக்கின்றிப் போகின்றாளாயினும், இராமனை விட்டுப் பிரிந்த இளையோனைமட்டும் அவள் தனியே காண நேர்ந்த வேற்றுமையால் இங்கு இந்நிகழ்ச்சி சுவை சிறிது பெறுகின்றது. ஒருத்தி எதிர்வரும் இருவரில் ஒருவனை 'நாத' என்றழைப்பதும் அவ்வொருவன் உடனே அவள் நாசியோடு, தான் கொய்து கொய்து பழகியுள சில உறுப்புக்களை அறுத்து அப்பால் போவதும் கதையினை ஓட்டுகின்ற வேகத்தாற் சிறக்கின்றதேனும், கம்பர் அத்துணை வேகத்தை ஆதரிக்காமல் அயோமுகிக்கு ஓர்படலம் கொடுப்பதற் கிசைந்தார். இப்படலத்தின் தலைவியாகிய அவ்வரக்கி,

நன்மதி யோர்புகன் மந்திர நாமச்
சொன்மதி யாவர விற்றொடர் கிற்பாள்
தன்மத னோடுதன் வெம்மை தணிந்தாள்
மன்மத னாமிவ னென்னு மனத்தாள்

[நல்ல அறிவுடையவர்கள் கூறுகின்ற அச்சத்தைத்தருகின்ற மந்திரத்தை மதித்து அடங்காத பாம்புபோலத் தொடர்பவள், இவன் மன்மதனே என்னும் எண்ணத்தினளாய், தன் செருக்கோடு கோபமுந் தணிந்தவள் ஆனாள்]

அந்நிலையின் அடையாளம்,

அழுந்திய சிந்தை யரக்கி யலக்கண்
எழுந்தயர் காதலின் வந்தெதிர் நின்றாள்
புழுங்குமென் னோடொடு புல்லுவெ னன்றி
விழுங்குவெ னோவென விம்ம லுழன்றாள்.

[இவ்வண்ணம் தாழ்ந்த மனத்தையுடைய அயோமுகி, வருத்தம் உண்டாக்கி மிகுகின்ற காதலினால், இலக்குவனுக்கு எதிரில் வந்து நின்று, "புழுங்குகின்ற என் காமநோயினோடு இவனைத்தழுவுவேனேயன்றி இவனை விழுங்குவேனோ" என்று விம்மி விம்மி வருந்தினாள்]

எனப் பின்வரும் பாட்டில் தெரிகின்றது. விழுங்கவொட்டாமல் தடுக்கின்றதே இப்பாழும் காமம் என்று அரக்கி அழுங்குவது தக்கதே. இறுதியில் இவள் முயங்குவதே கடன் என முடிவிற்கு வந்தது இலக்குவன் வனப்பிற்கு நற்பெருங் கரியாய் நின்றது. அரக்கியரின் ஆசையைத் தூண்டுவதில் இவன் தன் அண்ணனுக்குத் தோற்கவில்லை.

இரந்தனெ னெய்திய போதிசை யாது
கரந்தன னேனனி கொண்டு கடந்தென்
முரஞ்சினின் மேவி முயங்குவெ னென்று
விரைந்தெதிர் வந்தன ளெயினும் வெய்யாள்

[நெருப்பினுங் கொடியவளாகிய அவள், என் ஆசைக்கு இணங்கும்படி நான் இவனை வேண்டிக்கொண்டு நெருங்கும்போது இவன் இணங்காமல் மறுத்துவிடுவானானால் நான் இவனை எடுத்துக்கொண்டு அப்பாற் சென்று என் குகையை அடைந்து வலிய முயங்குவேன், என்று விரைவாக அவனெதிர் வந்தாள்]

அன்னவள் தோற்றமும் வருகையும் இனிச் சில பாட்டுக்களில் வருணிக்கப்படுகின்றன. அரக்கியேயாக வருகின்றாளாதலின், வஞ்சியென நஞ்சமென வந்த அச் சூர்ப்பணகையின் திறத்தில்கண்ட மென்மையை இவ் வயோமுகியின்பாற் காண்பதற்கில்லை. மற்றுக் காமத்தின் செய்தி சிறிதுஞ் சாராத தாடகையை நோக்குங்கால் இவ்வயோமுகி வெறும் பூனை போல் தோன்றுகின்றனள். சிலம்புகள் சிலம்பிடை செறித்த கழலோடும், கடக்களிறு கையொடு கைதெற்றியமாலைபூண்டு, அரவுரழ் சூலக் கையினளாகி நிலக்கிரிகள் பின்தொடர மைவரை நெருப்பெரிய வந்ததென வந்த அத் தாடகைக்கெதிரே இவ்வயோமுகியின் சித்திரம் மிகச் சிறியது.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம் ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம் 2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம் 2-0-0

குழந்தைகளுக்கு

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை 0-4-0
பால சஞ்சீவினி 0-4-0
பால ஸுதா (டானிக்) 1-0-0

நஞ்சன்கூடு

தைலங்கள்:

சந்தனாதி 6 அவுன்ஸ் ரூ. 1-0-0
அமிர்தாமலக " 0-12-0
பிருங்காமலக " 0-12-0

ஸ்திரீகளுக்கு

ஸுதக டானிக் 2-0-0
கர்ப்பாசய டானிக் 2-0-0
ப்ரஸவ லேகியம் 1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மட. ச்யாவனப்ராசா மட. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-மாக்கேட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) மடடீ, மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

மட. ச்யாவனப்ராச.
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்,
ஜவரோக

[பம்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

உலகிலுள்ள 180 கோடி மக்களுள்ளும் 108மதப் பிரிவுகளும், 3065 வேறுபட்ட பாஷைகளும் இருக்கின்றன.

*     *     *

தென் அமெரிக்காவில் ஒரு நதியின் தண்ணீர் புளிப்பாயிருப்பதால் அதற்குக் "காடிநதி" என்று பெயரிட்டிருக்கின்றனர்.

*     *     *

வால் நக்ஷத்திரங்களின் நீளம் 10 கோடி மைலும், அகலம் கோடி மைலும், இதற்கு அதிகரிக்கலாமென்றும் வானசாஸ்திரிகள் கருதுகின்றார்.

*     *     *

சீன தேசத்தில் 1000 அடி உயரத்தில் ஒரு படிக்கார மலையிருக்கின்றதாம். அதனால்தான் படிக்காரத்திற்குச் சீனக்காரம் என்று பெயர் வழங்குகின்றது.

*     *     *

தென் அமெரிக்காவிலுள்ள கரோலினா என்ற நகரிலிருக்கும் ஒரு பெரிய ஓட்டலில், அதிக உயரமான மனிதர்கள் தங்குவதற்கென 64 அறைகள் தனியாகக் கட்டப்பட்டிருக்கின்றன.

*     *     *

சிறிய உலகம்:—பாரிஸ் நகரிலுள்ள ஒரு கலாசாலைத் தோட்டத்தில் 16 ஏக்கர் விஸ்தீரணத்தில் ஒரு சிறிய உலகம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதில் உலகிலுள்ள எல்லாத் தேசங்களும் அவற்றில் அடங்கிய காடு, மலை, வெளி நகரம், ஆறு, சமுத்திரம் முதலியவைகளும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. நீர்நிலையங்களெல்லாம் தண்ணீரால் பெருக்கப்பட்டிருத்தலால், கலாசாலை மாணவர்கள் சிறிய நீராவிக் கலங்களிலேறி உலக யாத்திரை செய்ய வசதிகளிருக்கின்றனவாம்.

**NATIONAL INSURANCE COMPANY, LIMITED.**
**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

**FIRE & ACCIDENT RISKS**
**covered by**
**NATIONAL FIRE**
**AND**
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta**

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

தடிப் பெண் தற்கொலை:—நியூயார்க் பள்ளிக்கூட மாணவியாயிருந்த மேரி டேன் என்ற 17 வயதுள்ள பெண் எல்லோரும் தன்னைத் தடிப்பெண் என்று அழைத்ததால் வருந்தித் தற்கொலை செய்துகொண்டாள். அவள் 14 கல் 4 பவுன் நிறை யிருந்தாள்.

*     *     *

சர்வரோக நிவாரண தீர்த்தம்:—தென் ஆப்பிரிக்காவில் கேப்டவுனுக் கருகில் முப்பது மைல் தூரத்தில் சர்வ ரோகங்களையும் சீக்கிரம் குணப்படுத்தும் தண்ணீர்க் குட்டை ஒன்று இருப்பதாக ஒரு பத்திரிகையில் செய்தி பிரசுரிக்கப்பட்டது. அதுமுதல் இத்தடாகத்திற்குப் பத்தாயிரக் கணக்கான ஜனங்கள் மடை திறந்தமாதிரியாகப் போய்வருகின்றனர். தேகத்தில் சொரி, சிறங்கு, வெட்டை, புண்கள், கீல் பிடிப்பு நோய்கள் முதலியன உள்ள பலவித பிணியாளிகளும் அவ்விடத்தை ஆவலாய் நாடிச் செல்லுகின்றனர். அங்குச் செல்லும் அவர்கள் அவ்விடத்திலிருக்கும் களிமண் சகதியை மேலேயும் நோய்ப்பட்டுள்ள இடங்களிலும் பூசிக்கொள்ளுகின்றனர். அநேகர் தேகத்தில் அதைக்கொண்டு பற்றுப் போட்டுக்கொண்டு அங்கேயே வெயிலில் காய்கிறார்கள். நூற்றுக் கணக்கானவர்கள் அக்களிமண்ணைத் தங்கள் ஊருக்கு எடுத்துச் செல்லுகின்றனர். இவ்விதமாக வரும் ஜனக் கூட்டங்கள் அந்த அதிசய இடத்திற்கு ஒரு திராட்சைத் தோட்டத்தில் புகுந்து போகவேண்டி யிருக்கின்றது. அத்தோட்டக்காரர் அவ்வழிச் செல்பவர் ஒவ்வொருவரிடமிருந்தும் பிரவேசக் கூலி வசூலிக்கின்றார். இவ்விதம் வசூலாகும் தொகை அவருக்குத் தோட்டத்தில் பயிராகும் திராட்சையினால் கிடைக்கும் வருமானத்தைவிடப் பன்மடங்கு அதிகப்பட்டுவிட்டதாம். ஆகவே அவர் அச்செடிகளைப் பற்றிக் கவனம் செலுத்துவதை விட்டுவிட்டார்.

*     *     *

பூமி அதிர்ச்சியைத் தெரிவிக்கும் பிராணிகள்:—பூமி அதிர்ச்சிகள் உண்டாவதற்கு 3, 4 நாட்களுக்கு முன்னதாகவே எலிகளும், கிளிகளும் அதனை உணர்ந்துகொள்ளுகின்றனவாம். மெக்ஸிகோவிலும், குவாடலஜாராவிலும் பூமி அதிர்ச்சி உண்டாவதற்குமூன்று நாளைக்கு முன்னதாகவே ஆங்குக் காடுகளிலிருந்த கிளிகள் அமைதியின்றி இங்குமங்குமாகப் பறந்து சத்தமிட்டுக்கொண்டிருந்தனவாம். எலிகள் எல்லாம் அந் நகரங்களை விட்டு ஓடிவிட ஆரம்பித்துவிட்டனவாம்.

*     *     *

மணிக்கு 372 மையில்:—இத்தலியில் காப்டன் பீட்ரோ என்ற வான வீரர் மணிக்கு 372மைல்வீதம் தமது விமானத்தில் பறந்து பரிசு பெற்றிருக்கின்றார்.

அமிர்தசாகரம்
தேகபலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் எங்களுடைய
**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**
**அமிர்தசாகரம் போன்றவை.**
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0
ஓஹும்! இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி ஓஹும்!
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)